# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

********

*****

**முறையீட்டு மனு எண்.845/2016/பே**
**ஆணை நாள் 05–12–2018**

**திரு.எம்.சேதுராமன்,**
**த/பெ. மூர்த்தி நாயுடு (லேட்),**
**59/1, முனியப்பன் கோவில் வீதி,**
**வருந்தியாபாளையம் புதூர்,**
**சாலைப்புதூர் அஞ்சல்,**
**ஈரோடு மாவட்டம் – 638 151.** — முறையீட்டு மனுதாரர்.

**பேரூராட்சி முன்னாள் தலைவர்,**
**வெங்கம்பூர் பேரூராட்சி,**
**வடக்கு புதுப்பாளையம் அஞ்சல்,**
**ஈரோடு மாவட்டம் – 638 152.** — எதிர் மனுதாரர்.

**ஆணை.**

ஈரோடு மாவட்டம், வருந்தியாபாளையம் புதூர், எண்.59/1, முனியப்பன் கோவில் தெருவினைச் சேர்ந்த திரு. எம்.சேதுராமன் என்பவரின் 16.08.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.08.2016 அன்று பெறப்பட்டது. மேற்படி மனுவில், 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ விதிகள், விதி6–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு ரூ.10/–க்கான நீதிமன்ற வில்லைக் கட்டணம் ஒட்டப்படவில்லை. எனவே இம்முறைமன்ற நடுவ 26.08.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி விதிகளின்படி நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் மனுவினைத் தாக்கல் செய்திட முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. இதனையடுத்து முறையீட்டு மனுதாரர், உரிய விதிகளின்படி 06.09.2016 நாளிட்ட தனது மனுவினை நீதிமன்ற வில்லைக் கட்டணத்துடன் 08.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். முறையீட்டு மனு எண். 845/2016 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும், உரியவாறு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.எம். சேதுராமன், முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளை தெரிவித்துள்ளார்.

1. பேரூராட்சி மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளின் தரமற்ற அமைப்பு, பணிகள் மூலம் அரசு பணம் மோசடி.
2. வெங்கம்பூர் பேரூராட்சி அலுவலக புதிய அலுவலகக் கட்டிடம் மதிப்பீட்டினை விட அதிக தொகை வழங்கியது – மோசடி.
3. திடக்கழிவு மேலாண்மை திட்டம் கீழ் முறையாக செயல்படுத்தாமை– அரசு நிதி மோசடி.
4. வெங்கம்பூர் பேரூராட்சியில் புதிய கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கியதில் மோசடி மற்றும், வரி விதிப்பு நிர்ணயித்தலில் குறைபாடு --பேரூராட்சிக்கு நிதியிழப்பு.
5. வணிக வளாகங்களுக்கு அரசு விதி முறைகளின்படி வரி விதிப்பு, மற்றும் தொழில் வரி விதிப்புகள் மீதான மோசடிகள் – வருவாய் இழப்பு.
6. காவிரி குடி நீர் திட்டத்தின் கீழ் தனியார் இல்ல இணைப்புகள் அனுமதியற்ற முறையில் வழங்கியும், குடிநீர் கட்டணத்திற்கு உரிய இரசீது வழங்காமல் போலியான இரசீதுகள் மூலம் குடிநீர் கட்டண வசூல் மோசடி செய்யப்பட்டுள்ளது.
7. தனி நபர் இல்ல கழிப்பறை கட்ட மானயம் வழங்கலில் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டதாக தனது மூறையீட்டு மனுவில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்து விசாரணை கோரி முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 30.09.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 03.11.2016 நாளிட்ட அழைப்பாணை மூலம், மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக முறையீட்டு மனுதாரரின் விளக்கம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2016ல் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

28.11.2016ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.எம்.சேதுராமன் தனது வாக்குமூலத்தில் 06.09.2016 நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பிவைக்கப்பட்டதாகவும், இந்த புகார்கள் ஏற்கனவே தகவல் அறியும் உரிமை கட்டத்தின் கீழ் தனது மனுவில் குறிப்பிட்டு விவரம் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறைக்கும் மனு அனுப்பியதாகவும், சில தகவல்கள் தனக்கு முறையாக அளிக்காததால் மாநில தலைமை தகவல் ஆணையருக்கு புகார் அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். தனி நபர் கழிப்பறை கட்டும் திட்டத்தில் அரசு மான்யமாக வழங்கும் ரூ.8,000/– ஐ பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.சூரிய சிவகுமார் தன்னுடைய பினாமி நிறுவனமான சூர்யா கட்டுமான நிறுவனம் என்னும் பெயரில் மொத்தமாக 61 பயனாளிகளுக்கான மொத்த மான்யத் தொகை ரூ.4,88,888/– பயனாளிகளுக்கு போய்ச் சேராமல் விதிமுறைகளை மீறி மேற்படி நிறுவனம் மூலம் கடந்த நான்கு ஐந்து ஆண்டுகளாக பெரும்பாலான பயனாளிகளின் பெரும்பாலான தொகை கழிப்பிடம் கட்டப்படாமலே போலியாக பட்டியல் தயாரித்து ஏற்கனவே இருந்த கழிப்பறை கட்டிடத்தினை புகைப்படம் எடுத்து மொத்த தொகையும் மோசடி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் தொகுப்பு வீடு கட்டும் திட்டத்தில் ஒவ்வொரு தொகுப்பு வீட்டிற்கும் கழிவறைகளை உள்ளடக்கியே மதிப்பீடு செய்யப்படுவதாகவும், ஆனால் தனி நபர் கழிவறைகள் கட்டும் திட்டத்தின் கீழ் தொகுப்பு வீடுகள் பயனாளிகளின் கணக்கில், முழு பண மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், இது குறித்த தகவல், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 17.11.2016ல் வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தன்னால் பசுமை வீடு திட்டம் குறித்து கேட்கப்பட்ட அறிக்கைக்கு, பேரூராட்சி செயல் அலுவலரால் 18.08.2016ல் வேறொரு அறிக்கை அளிக்கப்பட்டதாகவும், இப்பொருள் தொடர்பாக திரு.சின்னசாமி என்பவரால் கேட்கப்பட்ட விளக்கத்திற்கு பேரூராட்சி செயல் அலுவலரால் 18.11.2016ல் அளித்த அறிக்கை வேறுபாடாக உள்ளதாகவும் எது உண்மையான அறிக்கை என தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். வெங்கம்பூர் பேரூராட்சியில் குடிநீர் இணைப்பு வழங்கியதில் பெரும் முறைகேடு நடந்துள்ளதாகவும், மூன்றில் இரு பங்கு நபர்களிடமே ரசீது வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒரு பங்கு நபர்களுக்கு ரசீது போடாமல் பணம் பெற்றுக் கொண்டு விதிகளுக்கு முரணாக இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், அனைவருக்கும் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் கிடைப்பதாகவும், ஆனால் பேரூராட்சி பணம் வசூல் செய்யப்படவில்லை எனவும், ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ.6,500/– முதல் ரூ.8,000/– வரை வைப்புத் தொகையாகவும் மற்றும் இணைப்பு கொடுப்பதற்காக ரூ.4,500/– பெற்றுக் கொண்டு இணைப்பு வழங்கியதாகவும், இதில் சில தென்னை மட்டை நார் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலைக்கும் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த தொழிற்சாலையின் உரிமையாளர் பேரூராட்சி மன்றத் தலைவரின் உறவினர் எனவும், தனக்கு வேண்டியவர்களுக்கு கட்டிட அளவினை குறைத்து அதற்கான தொகையினையே வசூல் செய்வதாகவும், அதற்கு பதில் மீதி பணத்தினை தலைவர் பிரித்துக் கொள்வதாகவும், பேரூராட்சி தட்டச்சர் திருமதி. மகாலட்சுமி முறைகேடான அளவில் பணத்தை வசூல் செய்வதாகவும் தெரிவித்துள்ளார். திடக்கழிவு மேலாண்மை திட்டம் சுய உதவிக் குழுவில் உள்ள குடும்பத்தினை சார்ந்தவர்களுக்கே என சொல்வதாகவும், ஆனால் இத்திட்டம் செயல்படவேயில்லை எனவும் தெரிவித்துள்ளார். மெயின் ரோட்டில் செங்காளி காட்டுப்பள்ளம் என்ற இடத்தில் தீ வைத்து எரிப்பார்களேயொழிய எந்த நெறிமுறைகளும் கடைபிடிப்பதில்லை எனவும், முழு பணமும் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சி அலுவலகம் கட்டுவதற்கான மதிப்பீடு ரூ.40.00 லட்சம் எனவும், ஆனால் ரூ.42.00 லட்சம் பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கட்டிடம் கட்டியது பேரூராட்சி தலைவரின் பினாமி நிறுவனம் எனவும், அந்நிறுவனம் முதலில் பேரூராட்சி தலைவர் பெயரில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 30.11.2016 நாளிட்ட அழைப்பாணையில் இப்பொருள் தொடர்பாக தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய, வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலரை 10.01.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

25.11.2016 நாளிட்ட வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் மேற்படி முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கான விளக்க அறிக்கை கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1. வெங்கம்பூர் பேரூராட்சி மூலம் செயல்படுத்தப்படும் மத்திய மாநில அரசுகள் ஒதுக்கீடு செய்த பணிகள் மற்றும் பேரூராட்சி நிதியில் மேற்கொள்ளப்படும் பணிகள் உரிய அலுவலரின்

அனுமதி பெற்றும், பேரூராட்சி மன்றப் பொருளில் வைக்கப்பட்டும், உரிய தொழில் நுட்ப அலுவலரின் மதிப்பீடு பெற்றும் ஒப்பந்த விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை மன்ற அனுமதி பொருளில் வைத்து 15 வார்டு உறுப்பினர்கள் மற்றும் தலைவரின் அங்கீகாரம் பெற்றப்பின்னரே ஒப்பந்தக்காரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு, தொழில் நுட்ப அலுவலர்களின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டும், பணிகளை ஆய்வு மேற்கொண்டும், பணிகளுக்கான தரச்சான்று பெற்று பேரூராட்சி செயல் அலுவலரால் ஒதுக்கப்பட்ட அளவு புத்தகத்தில் அளவீடுகள் பதிவு செய்யப்பட்டு தொழில் நுட்ப அலுவலரின் கையொப்பம் பெறப்பட்ட பின்னரே ஒப்பந்தக்காரருக்கு காசோலை மூலம் தொகை வழங்கப்படுவதாகவும், தவறான செயல்பட்டில் பேரூராட்சி மூலம் ஒப்பந்தக்காரர்களுக்கு தொகை வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. 2012–13 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் திட்டத்தின் கீழ் வெங்கம்பூர் பேரூராட்சியில் அலுவலகக் கட்டிடம் ரூ.40.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதற்கான மதிப்பீடு கொடுமுடி பேரூராட்சித் தொகுப்பு உதவிப் பொறியாளர் மூலம் தயாரிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளரின் அங்கீகாரம் பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டதாகவும், மேற்படி பணி ஆரம்பத்தில் இருந்து முடிக்கப்படும் வரை பொறியாளர்கள் முன்னிலையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், பணி முடிக்கப்பட்டவுடன் உரிய அளவுகள் எடுக்கப்பட்டு பட்டியல் தயாரிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளரின் மேலாய்வு செய்து மேலொப்பம் பெறப்பட்டபின்னரே தொகை வழங்கப்படுவதாகவும், அலுவலக கட்டிடம் கட்டும் போது நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் கூடுதலாக ஆகும் செலவினத்தினை பேரூராட்சி பொது நிதியில் மேற்கொள்ள பேரூராட்சி மன்றத்தின் ஒப்புதலின் அடிப்படையிலேயே தொகை வழங்கப்பட்டதாகவும் இதில் தவறான செயல்பாடுகள் ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வெங்கம்பூர் பேரூராட்சியில், தினசரி வீடு வீடாக சென்று மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள நபர்களால் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் பெறப்பட்டு பேரூராட்சி உரப்பூங்காவிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு விண்ரோஸ் அமைக்கப்பட்டு குப்பைகள் உரமாக்கப்பட்டு வருவதாகவும், மேலும் உரப்பூங்காவில் கூடுதலாக விண்ரோஸ் அமைக்கவும், ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் 5 குதிரை திறன் மின் மோட்டார் பொருத்தி திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த பொது நிதியில் ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பேரூராட்சி பணியாளர்கள் போதுமானதாக இல்லாததால் சுய உதவிக் குழுவின் மூலம் மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்த தினக்கூலி அடிப்படையில் மகளிர் சுய உதவிக் குழுவின் பெயரில் பேரூராட்சி செயல் அலுவலரால் சம்பந்தப்பட்டவருக்கு காசோலை மூலம் தொகை வழங்கப்படுவதாகவும், மேற்படி முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளவாறு எந்த இடத்திலும் குப்பைகள் எரிக்கப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. வெங்கம்பூர் பேரூராட்சியில் ஏற்கனவே உள்ள பழைய வீடுகளை இடித்து புதிய வீடுகள் கட்டும்போது, பேரூராட்சியில் ஒவ்வொரு வருடமும் பதிவு பெற்ற கட்டிட வரைவாளரால் வரைபடம் மற்றும் அதற்கான மதிப்பீடுகளுடன் பெறப்பட்டு, பேரூராட்சி செயல் அலுவலரால்

ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, செலுத்தப்பட வேண்டிய தொகையினை விதிமுறைகளின் அடிப்படையில் வசூலித்து பேரூராட்சி கணக்கில் வரவாக வைக்கப்படுவதாகவும், வெங்கம்பூர் பேரூராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு, 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்படி வரி விதிப்பு செய்யப்பட்டும், வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளஅளவிற்கு வரி விதிப்பு செய்யப்பட்டு சொத்து வரி வசூலிக்கப்பட்டு, பேரூராட்சி கணக்கில் வரவு வைக்கப்படுவதாகவும், இச்செயல்கள் அனைத்தும் பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேலும் இவை அனைத்தும் தணிக்கைத் துறையினரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டு வருவதாகவும் இதில் எவ்வித முறைகேடுகளும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. வெங்கம்பூர் பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள 5 அரிசி ஆலைகள், 3 திருமண மண்டபங்கள் ஆகியவைகளுக்கு விண்ணப்பதாரர்கள் உரிய வரைபடங்களுடன் விண்ணப்பித்ததின் அடிப்படையில் பேரூராட்சி செயல் அலுவலரால் ஆய்வு மேற்கொண்டு உரிய கட்டிட விதிமுறைகளின்படி சேலம் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் வழங்கப்பட்ட அனுமதியின்பேரில் கட்டிட பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் செயல் அலுவலரால் ஆய்வு செய்த பின்னர் கட்டிடங்களுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டுள்ள தொகை பேரூராட்சி கணக்கில் செலுத்தப்படுவதாகவும், மேலும் வெங்கம்பூர் பேரூராட்சியில் நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அலுவலகத்தால் அனுமதி பெற்ற நார் மில் ஏதும் இல்லை எனவும், மேற்கண்ட இனங்கள் பேரூராட்சி செயல் அலுவலரால் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

6. வெங்கம்பூர் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ள வெங்கம்பூர் காவிரி ஆற்றில் கடந்த 2002ஆம் ஆண்டு முதல் நீர் உறிஞ்சு கிணற்றின் மூலம் பேரூராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும், பேரூராட்சியில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு உரிய அலுவலரின் அனுமதி பெற்று, மன்றப் பொருள் வைத்து செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு விண்ணப்பக் கட்டணம் ரூ.150/– குடிநீர் இணைப்பு வைப்புத் தொகைக் கட்டணம் ரூ.3,000/– தொழிற்சாலை மற்றும் வணிக உபயோகங்களுக்கு விண்ணப்பக் கட்டணம் ரூ.150/– வைப்புத் தொகை கட்டணம் ரூ.6,000/– நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு வசூலிக்கப்படும் தொகைகளுக்கு பேரூராட்சி செயல் அலுவலரால் உரிய இரசீது வழங்கப்படுவதாகவும், மேலும் தனி நபர் மூலம் விண்ணப்பதாரரிடம் தொகை ஏதும் பெறுவதில்லை எனவும் தெரிவித்துள்ளார். குடிநீர் இணைப்புகள் வழங்கப்படும்போது பேரூராட்சி செயல் அலுவலரால் தல ஆய்வு செய்த பின்னர் வரி விதிப்பு உள்ள கட்டிடங்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்புகள் வழங்கப்படுவதாகவும் இதில் எவ்வித வருவாய் இழப்போ முறைகேடோ ஏதும் நடைபெறவில்லையெனவும், இது சம்பந்தமாக இதுவரை பொது மக்களிடமிருந்தோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்தோ நாளது வரை எவ்வித புகாரும் வரப்பெறவில்லை எனவும், தனியார் குடிநீர் இணைப்புகளுக்கு வழங்கப்படும் மதிப்பீட்டிற்கு 10 சதவீதம் சென்டேஜ் கட்டணமும் சேர்த்து தொகை வசூலிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. வெங்கம்பூர் பேரூராட்சியில் தனி நபர் இல்லங்களில் கட்டப்படும் கழிப்பறைகளுக்கு மத்திய அரசு மான்யம் ரூ.4,000/– மாநில அரசு மான்யம் ரூ.2,000/– பேரூராட்சி பங்குத் தொகை ரூ.2,000/– ஆக மொத்தம் ரூ.8,000/– மட்டும் ஒவ்வொரு பயனாளிக்கும்

வழங்கப்படுவதாகவும், பேரூராட்சியில் தனி நபருக்கு வழங்கப்படும் விண்ணப்பத்திற்கு தொகை ஏதும் பெறப்படுவதில்லை எனவும், வெங்கம்பூர் பேரூராட்சியில் 2015–16ஆம் ஆண்டுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள தனி நபர் வீடுகளில் கட்டப்பட்ட 83 நபர்களுக்கு தனி நபர் கணக்கில் பேரூராட்சி மூலம் ரூ.6,64,000/– மற்ற தனி நபர் கழிப்பிடங்கள், நிறுவனத்தின் மூலம் கட்டப்பட்ட 61 கழிப்பிடங்களுக்கு ரூ.4,88,888/–ம் நிறுவனத்தின் பெயருக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளதாகவும், ஆக மொத்தம் 144 நபர்களுக்கு மட்டும் பேரூராட்சி மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட விவரப்படி அனைத்தும் உரிய விதிமுறைகளின்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனுமதிக்கப்பட்ட மன்றத்தின் மூலம் விவாதிக்கப்பட்டு, அதன்படி ஒவ்வொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு ஒவ்வொரு செலவினங்களும் மன்றத்தால் அங்கீகாரம் பெறப்பட்டும், பணிகள் ஆரம்பத்தில் இருந்து முடிக்கப்படும் வரை அனைத்து பணிகளும் பொறியாளர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பணிகள் முடிக்கப்பட்டதின் அடிப்படையில் உரிய அளவுகள் எடுக்கப்பட்டு பட்டியல் தயாரிக்கப்படுவதாகவும், அதனை உதவி செயற்பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்டு பின்னர் செயல் அலுவலரால் செலவினம் மேற்கொள்ளப்படுவதாகவும், இச்செலவினங்களை ஒவ்வொரு ஆண்டும் உள்ளாட்சி நிதித் தணிக்கை மூலம் தணிக்கை செய்யப்பட்டு வருவதாகவும், மேலும் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் அவ்வப்போது மேற்பார்வை செய்யப்பட்டு வருவதாக வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

10.01.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில், தான் மேற்படி வெங்கம்பூர் பேரூராட்சியில் 26.09.2016 முதல் 25.11.2016 வரை செயல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் திரு.சேதுராமன் நிலம் உள்ள பகுதியில் சாலை அமைக்கும் பணி நடைபெறும்போது, மேற்படி சாலைப்பணிக்காக தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் இல்லாத தடுப்புச் சுவரினை கட்டித் தரக் கோரியதாகவும், மேற்படி இனம் திட்ட மதிப்பீட்டில் இல்லாத நிலையில் அப்பணியினை செய்து தரவில்லை எனவும் இதன் பொருட்டே புகார் மனுவினை எழுதியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசின் திட்டப் பணிகளுக்கு உரிய நிறுவனத்திடம் இருந்து தரச்சான்றுகள் பெற்று திட்டப்பணிகள் செய்வதாகவும், தற்போது சூர்யா நிறுவனத்தில் பங்குதாரராக பேரூராட்சி மன்றத் தலைவர் இல்லை எனவும், மேலும் திட்டப் பணிகள் அனைத்தும் திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரி அதன் அடிப்படையில் டெண்டர் போடுபவர்களின் குறைந்த டெண்டரை பேரூராட்சி மன்றத்தால் அனுமதிக்கப்பட்டுத்தான் சூர்யா & கோ என்ற நிறுவனத்திற்கு திட்டப் பணிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அனைத்து அரசு திட்டப் பணிகளுக்கும் உரிய நிறுவனத்தின் தரச்சான்றுகள் பெற்றுள்ளதாகவும், திட்டக்கழிவு மேலாண்மை திட்டப்பணி, தினசரி குப்பை சேகரிக்கும் பணிகள் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு அதற்கான உதியம் மாதந்தோறும் காசோலை மூலம் வழங்கப்படுவதாகவும், மேலும் குப்பை விற்பனை செய்யும் தொகை பேரூராட்சியின் பொது நிதி கணக்கில் உரிய முறையில் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

வீட்டு வரைபட அனுமதியினை பொறுத்தவரை, வரைபட அனுமதி பெறப்படும் பரப்பு மற்றும் அதில் கட்டிடம் கட்டப்பட்டுள்ள பரப்பு ஆகியவையின் அடிப்படையில் பேரூராட்சி வரி வசூலர் மற்றும் செயல் அலுவலர் ஆகியோரால் கூட்டு தள ஆய்வு செய்யப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டுள்ள பரப்பு அளவிற்கு மட்டும் செயல் அலுவலரால் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலை, வணிக வளாகம், ஆகியவைகளுக்கு 2,000 சதுர அடியும், குடியிருப்பு கட்டிடங்களுக்கு 4,000 சதுர அடி என்ற விகிதத்திலும், அதற்கு மேல் அளவுள்ள கட்டிடங்களுக்கு சேலம் நகர் ஊரமைப்புத்துறை துணை இயக்குநர் அவர்களின் தொழில் நுட்ப அனுமதியின் பேரிலும் வரைபட அங்கீகாரம் செய்து வரி விதிப்பு செய்யப்படுவதாகவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

வெங்கம்பூர் பேரூராட்சியில் அனுமதிக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை மொத்தம் 500 எனவும், இவ்வெண்ணிக்கைக்கேற்ப பொது மக்களிடம் முறையாக விண்ணப்பம் பெற்று இதற்கு செலுத்த வேண்டிய டிபாசிட் கட்டணம், சென்டேஜ் கட்டணம், விண்ணப்பப் படிவ கட்டணம் ஆகிவைகள் செலுத்தி முறையாக குடிநீர் இணைப்பு வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

பேரூராட்சிக்கு 2015–16ம் ஆண்டுக்கு தனி நபர் கழிப்பிடம் 144 எண்ணிக்கை அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றை கட்டுவதற்கு ஒரு தனி நபருக்கு மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.4,000/– மாநில அரசின் பங்குத் தொகை ரூ.2,000/– பேரூராட்சியின் பங்குத் தொகை ரூ.2,000/– ஆக மொத்தம் ரூ.8,000/– மான்யத்தில் கழிப்பிடம் கட்டப்படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில், பொது மக்களிடத்தில் விண்ணப்பம் கோரப்பட்டதில், வரப்பெற்ற விண்ணப்பத்தில் கழிப்பிடம் கட்டியுள்ள தனி நபருக்கு ரூ.8,000/– கழிப்பிடம் கட்ட இயலாமல், ஒப்பந்தக்காரர்கள் மூலம் கட்டித் தரவேண்டும் என கோரியவர்களுக்கு, ஒப்பந்தக்காரர் மூலம் கழிப்பிடம் கட்டி மொத்தம் 61 எண்ணிக்கையிலான கழிப்பிடங்களுக்கு காசோலை மூலம் ரூ.8,000/– வீதம் தொகை வழங்கப்பட்டுள்ளதாக வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

வெங்கம்பூர் பேரூராட்சியின் தற்பாதைய செயல் அலுவலர் திரு.கா.ஞானசுந்தரம், தனது 10.01.2017 நாளிட்ட வாக்குமூலத்தில் தான் 2611.2018 முதல் வெங்கம்பூர் பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பில் பணி புரிவதாகவும், கொடுமுடி பேரூராட்சியின் செயல் அலுவலராக இருப்பதாகவும் தெரிவித்து, 10.01.2017ல் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்ட பதில்களுக்கான ஆதார ஆவணங்களின் நகல்களையும் திரு.எம். சேதுராமன், முறையீட்டு மனுதாரரின் 09.01.2017 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் குறித்த பதிலுரையினை 24.01.2017க்குள் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் தனது 09.01.2017 நாளிட்ட கடிதத்தில், தான் 06.09.2016 அன்று முறைமன்ற நடுவத்தில் வெங்கம்பூர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு.சூர்யசிவகுமார், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் தட்டச்சர் திருமதி. மகாலட்சுமி ஆகியோர் நிர்வாகத்தில் செய்த முறைகேடுகள் தொடர்பாக புகார் அளித்திருந்ததாகவும், அதன் அடிப்படையில் 28.11.2016ல் வாக்குமூலம் அளிக்கப்பட்டதாகவும், மேலும் இவ்வழக்கு தொடர்பாக வெங்கம்பூர் பேரூராட்சியில் தகவல் பெறும் உரிமை சட்டப்படி பல ஆவணங்கள் கோரியமைக்கு, அதில் பல ஆவணங்கள் கொடுக்க மறுத்து சில ஆவணங்கள் மட்டும் கொடுத்துள்ளதாகவும் அதனை முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும், மேலும் வெங்கம்பூர் பேரூராட்சி

வடக்குபுதுப்பாளையம் வார்டு எண்.11–ல் 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டியதாக இருமுறை பணம் பெற்றதாகவும், வடக்கு புதுப்பாளையம் மாரியம்மன் கோவில் அருகில் கான்கிரீட் சாலை அமைத்தமைக்கு இருமுறை பணம் பெற்றுள்ளதாகவும், சூர்யா அன் கோ நிறுவனம் மூலம் பல பணிகள் நடைபெறாமலேயே நூதன முறையில் மோசடியாக பணம் பெற்றுள்ளதாகவும் இந்த முறைகேடுகளை பேரூராட்சி தலைவர், செயல் அலுவலர், மற்றும் பொறியாளர் ஆகியோர் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதுடன், மேற்படி பேரூராட்சியில் தட்டச்சராக பணியாற்றிய திருமதி மகாலட்சுமி என்பவர் பெருந்துறை தோப்பு பாளையத்தில் சுமார் ரூ.1.50 கோடியில் வளாகம் கட்டியுள்ளதாக அறிந்து, திருமதி. மகாலட்சுமி தன் வருவாய் மூலம் ஈட்டிய சொத்துப் பட்டியல் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டப்படி பலமுறை கேட்டும் பொதுத் தகவல் அலுவலர் தனக்கு பதில் அளிக்கவில்லை எனவும் திருமதி. மகாலட்சுமி அவர்கள் வருமானத்திற்கு அதிகமாக முறைகேடாக சொத்து சேர்த்து உள்ளாரா என்பதை புதிய விசாரணையின் மூலம் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 23.01.2017 நாளிட்ட கடிதத்தில் 09.01.2017 நாளிட்ட முறையீட்டு மனுதாரர் திரு.எம்.சேதுராமன் அவர்களின் புகார்களுக்கான பதிலை கீழ்க்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

வெங்கம்பூர் பேரூராட்சியினுல் 2011 முதல் 2016 வரை சூர்யா அண்டு கோ நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள், மற்றும் இதே காலத்தில் பிற நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட விவரப்பட்டியல், மேலும் ஒப்பந்தத்தில் கலந்து கொண்ட நிறுவனம், அவைகளின் பெயர், மதிப்பீடு மற்றும் ஒப்பந்த சதவீதம் ஆகியவற்றினை இணைத்தும், மேலும் வெங்கம்பூர் பேரூராட்சி, வடக்குப் புதுப்பாளையம் வார்டு எண்.11ல், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி கட்டியதாக இருமுறை முறைகேடாக பணம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்ட விவரம், முறையீட்டு மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் தெரிவித்துள்ளதாகவும், மேற்படி தகவலில் அலுவலக இளநிலை உதவியாளர் பதிவேட்டில் எடுத்து எழுதும்போது தவறுதலாக வேறு பணியின் பெயருக்கு பதிலாக ஒரே பணியினை இருமுறை எடுத்து எழுதப்பட்டுள்ளதாகவும், இது தவறு என அறிந்து மீண்டும் கோப்புகளை சரிபார்த்த போது (வ.எண்.44ல்) தவறுதலாக தகவல் தந்துள்ளது தெரியவந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் கூறியுள்ளது போது ஒரே பணியினை இரண்டு முறை செய்ததாக கூறி முறைகேடாக பணம் பெறப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

வடக்குப் புதுப்பாளையம் மாரியம்மன் கோவில் அருகில் கான்கிரீட் சாலை அமைத்ததை இருமுறை பணம் பெற்றுள்ளார் என முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளமைக்கு, மேற்படி பணி இருமுறை செய்ததாக பணம் ஏதும் பெறப்படவில்லை எனவும், அலுவலக இளநிலை உதவியாளர் ஒப்பந்தப்புள்ளி வருகைப் பதிவேட்டில் எடுத்து எழுதும் போது கவனக்குறைவாக வேறு பணிக்கு பதிலாக ஒரே பணியினை இருமுறை எடுத்து எழுதப்பட்டுள்ளதாகவும், இது தவறு என மீண்டும் கோப்புகள் சரிபார்த்தபோது (வ.எண்.95) தெரியவந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் கூறியுள்ளது போல் மேற்படி பணியினை இருமுறை செய்ததாக தொகை ஏதும் வழங்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

சூர்யா அண்டு கோ நிறுவனம் மூலம் பேரூராட்சியில் பல பணிகள் நடைபெறாமலேயே பணிகள் நடைபெற்றதாகவும், நூதன முறையில் மோசடியாக பணம் பெற்றுள்ளார் என தெரிவிக்கப்பட்டமைக்கு, வெங்கம்பூர் பேரூராட்சியில் பணிகள் நடைபெறாமலேயே சூர்யா அண்டு கோ நிறுவனத்திற்கு பணம் ஏதும் வழங்கப்படவில்லை எனவும், வெங்கம்பூர்

பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய திருமதி.ப.மகாலட்சுமி, என்பவர் பெருந்துறை தோப்புப் பாளையத்தில் சுமார் ரூ.1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வளாகக் கட்டிடம் கட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்ட புகாரியனையடுத்து விசாரணை மேற்கொண்டதில் மேற்காணும் பணியாளருக்கு மேற்கண்ட இடத்தில் சொந்தமான இடமோ, கட்டிடமோ இல்லை என உரிய அலுவலரிடம் சான்று பெறப்பட்டுள்ளதாகவும், எனவே இப்புகார் முற்றிலும் உண்மையானதல்ல எனவும் தெரிவித்தும், முறையீட்டு மனுதாரர் திரு.வி.சேதுராமன் தனக்கும் பேரூராட்சி தலைவருக்கும் உள்ள தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக வெங்கம்பூர் பேரூராட்சி நிர்வாகத்தின் மீது உண்மைக்கு மாறான புகார்களை தெரிவித்துள்ளாக தனது அறிக்கையில் வெங்கம்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

21.08.2017 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரர் திரு.எம்.சேதுராமன், என்வரின் 16.08.2016 நாளிட்ட மனுவில் கண்டுள்ள புகார்கள் மீது உரிய தல ஆய்வு மேற்கொண்டும், வெங்கம்பூர் பேரூராட்சி அலுவலக ஆவணங்களை ஆரய்ந்தும் விரிவான அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது.

17.01.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 22.03.2018ல் ஆஜராகத் தெரிவித்து வெங்கம்பூர் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. சூர்ய சிவக்குமார் என்பவருக்கு ஆணையிடப்பட்டது.

ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 19.01.2018 நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான ஆய்வறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் 28.12.2017ல் விசாரணை மேற்கொண்டதாகவும் அதற்கான அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

**1.பேரூராட்சி மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டப் பணிகளின் தரமற்ற அமைப்பு பணிகள் மூலம் அரசு பணம் மோசடி.**

வெங்கம்பூர் தேர்வு நிலை பேரூராட்சி மூலம் செயல்படுத்தப்படும் மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கீடு செய்த பணிகள், மற்றும் பேரூராட்சி பொது நிதி மேற்கொள்ளப்படும் பணிகள் அனைத்தும் உரிய அலுவலரின் அனுமதி பெற்று, பேரூராட்சி மன்றப் பொருளில் வைக்கப்பட்டு, தீர்மானத்தின் அடிப்படையில் அரசு நிர்ணயித்துள்ள அளவீட்டின்படி ஒவ்வொரு பணிகளுக்கும் உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மதிப்பீட்டுத் தொகைக்கான தொழில் நுட்ப அனுமதிகள் பெறப்பட்டு, ஒப்பந்த விதிகளின்படி மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மன்ற அங்கீகாரம் பெற்று, பின்னர் பேரூராட்சி மூலம் பணி ஆணை வழங்கப்பட்டு, பொறியியல் பிரிவினரின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான அளவுகள் மேற்கொள்ளப்பட்டு பொறியாளரால் பணிக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகையின்படி, பட்டியலுக்கான தொகை கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்படுவதாகவும், இதில் பேரூராட்சி மன்றத் தலைவர் மன்ற தீர்மானம் மட்டுமே இயற்ற இயலும் எனவும் புகார் மனு தொடர்பாக, மனுதாரரால் இதில்

குறிப்பிட்டு ஏதும் குறிப்பிடப்படவில்லை எனவும், மேலும் முறையீட்டு மனுதாரரால் வெங்கம்பூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் தனது பினாமி நிறுவனமான சூர்யா அண்டு கோ என்ற நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டமைக்கான எந்த ஆதார ஆவணங்களும் இணைக்கப்படவில்லை என்பது விசாரணையின்போது தெரிய வந்ததாக தெரிவித்துள்ளார்.

**2.பேரூராட்சியின் புதிய அலுவலகக் கட்டிடம்.**

2012–13ம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள் திட்டத்தில் வெங்கம்பூர் பேரூராட்சிக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட ரூ.40.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் இப்பணிக்கான மதிப்பிடு கொடுமுடி பேரூராட்சித் தொகுப்பு உதவிப் பொறியாளரால் தயாரிக்கப்பட்டு, உதவி செயற்பொறியாளரின் தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்த விதிகளின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதாகவும், பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளுக்கு மன்ற அங்கீகாரம் பெற்று ஒப்பந்தக்காரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டதாகவும், பணி துவங்கும்போது உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் பணி மேற்பார்வையிட்டு பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும், அலுவலக கட்டிடம் கட்டும்போது, நிதி ஒதுக்கீட்டிற்கு மேல் கூடுதலாக ஆகும் செலவினத்திற்கு பேரூராட்சி பொது நிதியில் நிதி ஒதுக்கீடு செய்ய பேரூராட்சியில் மன்றப் பொருள் வைக்கப்பட்டு உரிய அலுவலரின் அனுமதி பெறப்பட்டதாகவும், இவ்வாறு கூடுதலாக மேற்கொள்ளப்பட்ட செலவினம் அளவுப் புத்தகத்தில் பொறியாளரால் அளவுகள் மேற்கொள்ளப்பட்டும், உதவி செயற்பொறியாளரால் மேலளவுகள் செய்யப்பட்டும் அதன் அடிப்படையில் தொகை கோடிட்ட காசோலையாக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டதாகவும், மேலும் முறையீட்டு மனுதாரரால் வெங்கம்பூர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் தனது பினாமி நிறுவனமான சூர்யா அன் கோ என்ற நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டமைக்கான ஆதாரங்கள் ஏதும் மனுவில் இணைக்கப்படவில்லை எனவும், தவறான செயல்பாடுகளுக்கு பேரூராட்சி மூலம் ஒப்பந்தக்காரருக்கு தொகை ஏதும் வழங்கப்படவில்லையெனவும், இதில் தவறான செயல்பாடுகள் ஏதும் நிகழவில்லை என்ற விவரம் விசாரணையின்போது தெரிய வந்ததாக தெரிவித்துள்ளார்.

**3.திடக்கழிவு மேலாண்மை.**

வெங்கம்பூர் பேரூராட்சி பகுதியில் உள்ள குடியிருப்புகளில் சுய உதவிக் குழுவினரால் மக்கும் குப்பைகள் மற்றும் மக்காத குப்பைகள் பெறப்பட்டு பேரூராட்சி உரப்பூங்காவிற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு விண்ரோஸ் அமைக்கப்பட்டு குப்பைகள் உரமாக்கப்பட்டு வருவதாகவும், மேலும் உரப்பூங்காவில் கூடுதலாக விண்ரோஸ் அமைக்கவும், ஏற்கனவே உள்ள ஆழ்குழாய் கிணற்றில் 5 குதிரைவேகம் கொண்ட மின்மோட்டார் பொருத்தி திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்த பொது நிதியில் ரூ.2.50 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் செயல்படும் சுய உதவிக் குழுவின் பெயரில் பேரூராட்சி செயல் அலுவலரால் பட்டியலுக்கான தொகையினை கோடிட்ட காசோலையாக வழங்கப்படுவதாகவும், இதில் பேரூராட்சி மன்றத் தலைவரின் தலையீடோ செயல்பாடோ ஏதும் இல்லை என்ற விவரம் விசாரணையின்போது தெரிய வந்ததாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**4.புதியக் கட்டிட அனுமதி மூலம் மோசடி.**

வெங்கம்பூர் பேரூராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள பழைய வீடுகளை இடித்து விட்டு புதிய ஓட்டுவில்லை, தார்சு வீடுகள் கட்டும்போது, ஒவ்வொரு வருடமும் பேரூராட்சியில் பதிவு பெற்ற கட்டிட வரைவாளரால் வரைபடங்கள் மற்றும் அதற்கான மதிப்பீடுகளுடன் பேரூராட்சி அலுவலகத்தில் பெறப்பட்டு, பேரூராட்சி செயல் அலுவலரால் மேலாய்வு செய்தபின்னர் விண்ணப்பதாரர் செலுத்தப்படவேண்டிய தொகையினை செலுத்த தெரிவித்து, உரிய விதிமுறைகளின் அடிப்படையில் தொகைகள் பெறப்பட்டு பேரூராட்சிக் கணக்கில் வரவு வைக்கப்படுவதாகவும், பேரூராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களில், 1920 நகராட்சிகள் சட்டப்படி வரி விதிப்பு செய்யப்படும் காலங்களில் வரைபடங்களில் உள்ள அளவிற்கு வரி விதிப்பு செய்யப்பட்டு சொத்து வரி வசூலிக்கப்பட்டு பேரூராட்சிக் கணக்கில் செலுத்தப்படுவதாகவும், இச்செயல்பாடுகள் அனைத்தும் பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டும், இவை அனைத்தும் தணிக்கைத் துறையினரால் ஆண்டுதோறும் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு இதில் அளவு குறைவாக வரி விதிக்கப்படவில்லை எனவும், இது சம்பந்தமாக நாளது தேதி வரை எவ்விதமான புகார் மற்றும் தணிக்கைத் தடையும் எழவில்லையெனவும், மேலும் கட்டிட அனுமதி வழங்குவது செயல் அலுவலரின் பணி எனவும் இதில் தலைவரின் செயல்பாடு எதுவும் இல்லை என்ற விவரம் விசாரணையில் தெரிய வந்ததாக தெரிவிக்கப்பட்டள்ளது.

**5.வணிக வளாகங்களுக்கு வரி வதிப்பு மற்றும் தொழில் வரி விதிப்புகள் மீதான மோசடிகள் வருவாய் இழப்புகள்.**

வெங்கம்பூர் பேரூராட்சி எல்லைக்குள் 5 அரிசி அலைகள், 3 திருமண மண்டபங்கள் ஆகியவைகளுக்கு உரிய வரைபடங்களுடன் விண்ணப்பித்ததின்பேரில் விதிமுறைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், குடியிருப்புகளுக்கு 4,000 சதுர அடி வரையும், வணிக நிறுவனங்களுக்கு 2,000 சதுர அடி வரையும் பேரூராட்சி மூலம் சட்ட விதிகளுக்குட்பட்டு அங்கீகரிக்கப்படுவதாகவும், மேற்படி சதுர அடிகளுக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு சேலம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும், மேற்படி அலுவலக அனுமதியின்பேரில் கட்டிட பணிகள் முடிக்கப்பட்ட பின்னர் உரிய அலுவலரால் ஆய்வு மேற்கொண்டு கட்டிடங்களுக்கு புதிய வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், விதிகளுக்கு முரணாக எந்த ஒரு கட்டிடத்திற்கும் வரி விதிப்பு செய்யப்படவில்லையெனவும், மேலும் புதிய கட்டிடங்களுக்கு வரி விதிப்பு பணியானது செயல் அலுவலரையே சார்ந்தது எனவும் இதில் தலைவரின் செயல்பாடு ஏதும் இல்லை என்ற விவரம் விசாரணையில் தெரிய வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**6.காவிரி குடிநீர் தனியார் இணைப்புகள் உரிய அனுமதியற்ற இணைப்புகளுக்கு இணைப்புக் கட்டணம் பெற்று இரசீது வழங்காமை மற்றும் போலியான இரசீதுகள் மூலம் குடிநீர் கட்டண வசூல் மோசடிகள்.**

வெங்கம்பூர் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ள வெங்கம்பூர் காவிரி ஆற்றில் கடந்த 2002–ஆம் ஆண்டு முதல் நீர் உறிஞ்சு கிணற்றின் மூலம் பேரூராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும், பேரூராட்சியில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு உரிய அலுவலரின் அனுமதி பெற்று, மன்றப் பொருள் வைத்து செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு விண்ணப்பக்கட்டணம் ரூ.150/–, குடிநீர் இணைப்புக் கட்டணம் ரூ.3,000/– தொழிற்சாலை

மற்றும் வணிக உபயோகங்களுக்கு விண்ணப்பக்கட்டணம் ரூ.150/– குடிநீர் இணைப்புக் கட்டணம் ரூ.6,000/– நிர்ணயம் செய்யப்பட்டு, வெங்கம்பூர் பேரூராட்சியில் ஏற்கனவே 495 வீட்டுக் குடிநீர் இணைப்புகளும், 5 வணிக இணைப்புகளும் உள்ளதாகவும், மேலும் 168 வீட்டுக் குடிநீர் இணைப்புகள் தற்போது முறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பேரூராட்சியில் வசூலிக்கப்படும் தொகைகளுக்கு கணினி மூலம் இரசீதுகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தனி நபர் மூலம் விண்ணப்பதாரர்களிடம் தொகை ஏதும் பெறப்படுவதில்லை எனவும், பேரூராட்சி செயல் அலுவலரால் தல ஆய்வு செய்த பின்னர் வரி விதிப்பு உள்ள கட்டிடங்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்புகள் வழங்கும்போது, உரிய கட்டணத்தை வங்கிகள் மூலம் செலுத்தப்பட்டு பேரூராட்சிக்கு வரவு வைக்கப்பட்ட பின்னர் இணைப்புகள் வழங்கப்படுவதாகவும், இதில் எவ்வித வருவாய் இழப்போ, முறைகேடோ ஏதும் நடைபெறவில்லை எனவும், இது சம்பந்தமாக இதுவரை பொதுமக்களிடமிருந்தோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்தோ எவ்வித புகாரும் வரப்பெறவில்லை எனவும், தனியார் குடிநீர் இணைப்புகள் வழங்க தயார் செய்யப்படும் மதிப்பீட்டில் 10 சதவீதம் சென்டேஜ் கட்டணமாகவும் சேர்த்து வசூலிக்கப்படுவதாகவும், வசூல் செய்யப்படும் தொகைகளுக்கு இரசீகள் வழங்கப்படுவதுடன், இதில் தலைவரின் தலையீடோ, செயல்பாடோ ஏதும் இல்லை என்ற விவரம் விசாரணையில் தெரிய வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**7.தனிநபர் இல்ல கழிப்பறை கட்ட மான்யம் வழங்கலில் மோசடிகள் கையூட்டு நடவடிக்கைகள்.**

வெங்கம்பூர் பேரூராட்சியில் தனி நபர் இல்லங்களில் கட்டப்படும் கழிப்பறைகளுக்கு மத்திய அரசு மான்யம் ரூ.4,000/–, மாநில அரசு மான்யம் ரூ.2,000/– மற்றும் பேரூராட்சி மான்யம் ரூ.2,000/– ஆக மொத்தம் ரூ.8,000/– மட்டும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுவதாகவும், இப்பேரூராட்சியில் தனி நபருக்கு வழங்கப்படும் விண்ணப்பத்திற்கு தொகை ஏதும் பெறப்படுவதில்லை எனவும், 2015–16ம் ஆண்டுக்கு வெங்கம்பூர் பேரூராட்சியில் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு பேரூராட்சி பகுதியில் அமைந்துள்ள தனியார் வீடுகளில் கட்டப்பட்ட 83 நபர்களுக்கு தனி நபர் கணக்கில் பேரூராட்சி மூலம் ரூ.6,64,000/–ம் மற்ற வீடுகளில் தனி நபர் நிறுவனத்தின் மூலம் கட்டப்பட்ட கழிப்பிடங்கள் 61க்கு ரூ.4,88,000/–ம் நிறுவனத்தின் பெயருக்கு பேரூராட்சி மூலம் காசோலையாக வழக்பப்பட்டுள்ளதாகவும் ஆக மொத்தம் 144 நபர்களுக்கு மட்டும் பேரூராட்சி மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் தலைவரின் தலையீடோ, செயல்பாடோ ஏதும் இல்லை என்ற விவரம் விசாரணையின்போது தெரியவந்ததாக ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

02.02.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை மூலம், ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 19.01.2018 நாளிட்ட விசாரணை மற்றும் ஆய்வறிக்கையின் நகலினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அவ்வறிக்கையின் மீதான ஆட்சேபணை/விளக்கம் ஏதுமிருப்பின் அதன் விவரத்தினை உரிய ஆதார ஆவணங்களுடன் இரண்டு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 20.02.2018 நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கைக்கான தனது ஆட்சேபணை/விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்து, அவ்வறிக்கையில்

தான் ஏற்கனவே தெரிவித்த புகார்களையே மீண்டும் தெரிவித்தும், தனது தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரிய விவரங்களை பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்க அறிவுறுத்தியும் பேரூராட்சி மூலம் தரப்படவில்லை எனவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மேற்படி விசாரணைக்கு தனக்கு எவ்வித அழைப்பும் அனுப்பி தன்னை விசாரிக்கவில்லையெனவும், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கை குறித்து தனது தரப்பிலான கருத்துக்கள், ஆவண சான்றுகள் குறித்து தனக்கு வாய்ப்பளிக்க கோரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ஆய்வறிக்கையின் மீதான தனது மறுப்பினை தெரிவித்துள்ளார்.

22.03.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.டி.சூர்ய சிவகுமார் தனது வாக்குமூலத்தில், தான் 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை பேரூராட்சி தலைவராக இருந்ததாகவும், திரு.சேதுராமன், முறையீட்டு மனுதாரர் வெங்கம்பூர் பேரூராட்சி பகுதியினை சாராதவர் எனவும், நபார்டு திட்டத்தின் மூலமாக ரூ.50.00 லட்சம் மதிப்பீட்டில் வெற்றிக்கோணார்பாளையம் சாலை அமைத்ததாகவும், புதிதாக சாலை அமைத்ததற்கு அடுத்த பகுதி இச்சிபாளையம் எனவும் இப்பகுதியில் முறையீட்டு மனுதாரரின் தோட்டம் உள்ளதாகவும், அவருடைய தோட்டம் மிக உயரமாக உள்ளதால் அந்த உயரத்திற்கு சாலை அமைக்குமாறு தன்னிடம் கோரியதாகவும் தான் இந்த பணியினை முடிவு செய்ய இயலாது எனவும், இது ஏற்கனவே அரசால் அனுமதிக்கப்பட்ட பணி என சொன்னதைத் தொடர்ந்து, மேற்படி சாலை அமைப்பதை தடுக்க முயற்சி செய்ததாகவும், ஆனால் மேற்படி சாலை முழுவதுமாக அமைக்கப்பட்டுவிட்டதாகவும், முறையீட்டு மனுதாரரது தோட்டம் அளவிற்கு சாலையினை உயர்த்தி அமைத்துத் தரவில்லை என்பதற்காக தன் மீது புகார் மனுக்கள் எழுதி வருவதாகவும், பேரூராட்சியினை பொறுத்தவரையில் பணியினை நிர்ணயம் செய்யும்போது யார் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கிறார்களோ அவர்களுக்குத்தான் பேரூராட்சி மன்ற ஒப்புதலுடன் பணி வழங்கப்பட்டு வருவதாகவும், எனவே முறையீட்டு மனுதாரர் இப்பகுதியினை சாராதவர் என்பதாலும், மனுவில் உள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்பதால் மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பேரூராட்சி முன்னாள் தலைவர், முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுக்களுக்கான தனது 22.03.2018 நாளிட்ட வாதுரையினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

06.04.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் 20.02.2018 நாளிட்ட கோரிக்கையினை ஏற்று, முறையீட்டு மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவரின் கருத்துக்களை பெறும் பொருட்டு 17.05.2018ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

17.05.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.எம்.சேதுராமன், தனது வாக்குமூலத்தில், தான் வருந்தியாபாளையம் பகுதியினை சேர்ந்தவர் எனவும், இப்பகுதி வெங்கம்பூர் பேரூராட்சியினை சாராதது எனவும், சென்னாசமுத்திரம் பேரூராட்சியினை சேர்ந்தது எனவும் தெரிவித்துள்ளார். தான் வெங்கம்பூர் பேரூராட்சி தலைவர் குறித்து அனுப்பிய முறையீட்டு மனுவிற்குப் பின்னர் அனுப்பிய மற்றொரு மனுவில் பேரூராட்சி செயல் அலுவலரையும் எதிர் மனுதாரராக சேர்த்துள்ளதாகவும், இது குறித்து விவரம் விசாரணையில் ஏற்கனவே தன்னால் வாக்குமூலம் அளிக்கப்பட்டதாகவும்,

வெங்கம்பூர் பேரூராட்சியில் தன்னால் தகவல் அறியும் உரிமை சட்டத்தின்படி கோரிப் பெற்ற தகவல் அடிப்படையில், அதனை ஆதாரமாக வைத்து புகார் மனு அனுப்பியதாகவும், தான் முதலில் கோரிய தகவல் கொடுக்காததால் தகவல் ஆணையத்தில் மேல் முறையீடு செய்து தகவல்களை பெற்றதாகவும், தனது 20.02.2018 நாளிட்ட மனுவில் ஒரு தலைபட்சமாக தீர்ப்பு வழங்கியதாக தெரியாமல் எழுதிவிட்டதாகவும், எதிர் மனுதாரர் திரு.சிவகுமார் என்பவருக்கும், திரு.சூர்யா என்பவருக்கும் சம்பந்தம் இல்லை என சொல்லியிருப்பது தவறு எனவும், அவர்கள் பங்குதாரர் என்பதற்கு ஆதாரம் தொழில் பதிவு, வருமான வரி தாக்கலில் பங்குதாரர் என கையொப்பமிட்டு தாக்கல் செய்துள்ளதாகவும், நாளது வரை மேற்படி சூர்யா & கோ, நிறுவனம் திரு சூர்ய சிவகுமார் என்பவரின் வீட்டு விலாசத்தில் இயங்கி வருவதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் ரூ.9.57 லட்சம் மான்யம் பெற்றுள்ளதாகவும், கட்டிடம் ரூ.5.00 லட்சத்திற்கு கட்டியுள்ளதாகவும், மக்கும் குப்பைகளை விற்றதின் மூலம் ரூ.11,250/– வருவாய் ஈட்டியுள்ளதாகவும், இதற்கு செலவு ரூ.4.57 லட்சம் செலவு செய்துள்ளதாகவும், திடக்கழிவு மேலாண்மை பணி நடக்காமல் இந்த குப்பைகளை எல்லாம் செங்காலி காட்டுப்பள்ளம் ஈரோடு பிரதான சாலையோரம் வைத்து தீ வைத்து எரிக்கப்பட்டதாகவும், புதிய கட்டிடத்திற்கு அனுமதி கொடுத்து ஒரு தொகையினை வாங்கிக் கொண்டு போலியான ரசீதுகளை கொடுத்துள்ளதாகவும், தனது மனுவில் உள்ள எழுத்து பூர்வமான விளக்கத்தினை தான் முறைமன்ற நடுவத்தில் இன்று சமர்ப்பிப்பதாகவும், தனது எழுத்து பூர்வ மனுவினையும் தனது வாக்குமூலமாக எடுத்துக் கொள்ள தெரிவித்து தனது தரப்பிலான வாதுரையினையும் சமர்ப்பித்துள்ளார்.

01.06.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் 17.05.2018 நாளிட்ட வாக்குமூலம், மற்றும் கூடுதல் வாதுரையின் நகலினை எதிர் மனுதாரரான வெங்கம்பூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் திரு.டி.சூர்ய சிவகுமார் என்பவருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதில் தெரிவித்துள்ள கருத்துக்களுக்கான விளக்கத்தினை உரிய ஆவண ஆதாரங்களுடன் 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

01.06.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரர் திரு.எம்.சேதுராமன் அவர்களின் 1608.2016 நாளிட்ட முறையீட்டு மனு மீதான 17.05.2018 நாளிட்ட வாக்குமூலம் மற்றும் கூடுதல் வாதுரை நகல் ஆகியவற்றினை ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அதன் மீது உரிய விசாரணை மேற்கொண்டு விசாரணைக் குறிப்புகளை உரிய பரிந்துரைகளுடன் 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

திரு.டி.சூர்ய சிவகுமார், வெங்கம்பூர் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் தனது 11.06.2018 நாளிட்ட கடிதம் மூலம் முறையீட்டு மனுதாரரின் 17.05.2018 நாளிட்ட வாக்குமூலம் மற்றும் கூடுதல் வாதுரைக்கான தனது விளக்கத்தினைத் தெரிவித்துள்ளார். அதில் தான் ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் பேரூராட்சி தலைவராக பொறுப்பேற்ற நாள் முதல் தனது கடமையினை உணர்ந்து தனது அதிகார வரம்பிற்குட்பட்ட பணிகளை மட்டுமே செய்துள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறானது எனவும், அவரின் புகார்கள் அனைத்தும் பேரூராட்சி தலைவர் பதவியில் இருப்பவர்களுக்கு எந்த வகையிலும் ஏற்ககூடியதல்ல எனவும், அலுவலக கோப்புகள் அனைத்தும் செயல்

அலுவரின் கட்டுப்பாட்டில் இருக்ககூடியது எனவும், அதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் முடிவு எடுக்கும் அதிகாரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கே இருப்பதாகவும், இவ்வாறுள்ள நிலையில் ஒரு தனி நபரை அரசியல் நோக்கத்துடன் பழிவாங்கும் எண்ணத்தில் முறையீட்டு மனுதாரர் இவ்வாறு தொடர்ந்து புகார்கள் அனுப்புவதாகவும், முறையீட்டு மனுதாரர் கூறியுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனத் தெரிவித்து, மனுதாரர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்களுக்கான தனது கூடுதல் வாதுரையினையும் இம்முறைமன்ற நடுவத்தில் சர்ப்பித்துள்ளார்.

ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 10.09.2018 நாளிட்ட அறிக்கையில் இம்முறைமன்ற நடுவ 21.08.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் தெரிவித்துள்ள விவரங்கள் குறித்து 0509.2018ல் விசாரணை மேற்கொண்டதாகவும், அதன் விவரங்களை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

1. வெங்கம்பூர் பேரூராட்சியில், தினசரி வீடு வீடாக சென்று மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள நபர்களால் மக்கும் குப்பைகள், மற்றும் மக்காத குப்பைகள் பெறப்பட்டு, பேரூராட்சி உரப்பூங்காவிற்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு விண்ரோஸ் அமைக்கப்பட்டு குப்பைகள் உரமாக்கப்படுவதாகவும், 2015–16ம் நிதியாண்டில் வள மீட்பு பூங்காவில் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் உரப்பூங்காவில் கூடுதலாக பிளாட்பாரம் அமைக்க செலவிடப்பட்டுள்ளதாகவும், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவின் பெயரில் பேரூராட்சி செயல் அலுவலரால் காசோலை மூலம் தொகை வழங்கப்பட்டு, குழுவின் கணக்கு பெயரில் தொகை வரவாக்கப்பட்டு வருவதாகவும், மேற்படி மகளிர் சுய உதவிக் குழு மூலம் செய்யப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணி பொதுமக்களின் சுகாதார நலனுக்காகவும், பொது நலன் கருதியும் தான் இப்பணி செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், வருவாயை எதிர்நோக்கி செயல்படுத்தப்படவில்லையெனவும், மேற்காணும் மனுவில் தெரிவித்துள்ளவாறு வெங்கம்பூர் பேரூராட்சியில் எந்த பகுதியிலும் குப்பைகள் எரிக்கப்படுவதில்லை என்ற விவரம் நேரடி தல ஆய்வின் மூலம் தெரியவந்ததாகவும், மேலும் திடக்கழிவு மேலாண்மை செம்மையாக செல்படுத்தவும் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வண்ணம் பேரூராட்சியின் நிர்வாகம் செயல்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. வெங்கம்பூர் பேரூராட்சியின் பராமரிப்பில் உள்ள காவிரி ஆற்றில், கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் நீர் உறிஞ்சு கிணற்றின் மூலம் பேரூராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும், பேரூராட்சியில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கு உரிய அலுவலரின் அனுமதி பெற்று, மன்ற பொருள் வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், மேலும் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு விண்ணப்பக் கட்டணம் ரூ.150/–ம், குடிநீர் இணைப்பு வைப்புத் தெகை கட்டணம் ரூ.3,000/–ம், தொழிற்சாலை மற்றும் வணிக உபயோகங்களுக்கு விண்ணப்பக் கட்டணம் ரூ.150/–ம் குடிநீர் இணைப்பு வைப்புத் தொகை கட்டணம் ரூ.6,000/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் குடிநீர் கட்டண பதிவேடுகளை நேரடி ஆய்வு செய்யப்பட்டபோது, அனுமதியற்ற குடிநீர் இணைப்புகள் 67 கண்டறியப்பட்டதின் பேரில், அவ்விணைப்புகள் துண்டிப்பு செய்ய பேரூராட்சி மன்றத் தீர்மான எண். 47/2017, நாள் 26.04.2017ன்படி, தீர்மானம் பெற்று கண்டறியப்பட்ட 67 துண்டிக்கப்பட்ட இணைப்புகள் முறைப்படுத்துவதற்கு அதற்குரிய அபராதக் கட்டணத் தொகை ரூ.5,000/– துண்டிப்புக் கட்டணம் ரூ.500/– மற்றும் சென்டேஜ் கட்டனம் சேர்த்து சம்பந்தப்பட்ட

நபர்களால் பேரூராட்சி வங்கி கணக்கில் உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், மேலும் தனி நபர் மூலம் நேரடியாக பேரூராட்சி அலுவலகத்தில் தொகை ஏதும் பெறப்படுவதில்லை எனவும், குடிநீர் இணைப்புகள் வழங்கும்போது பேரூராட்சி செயல் அலுவலரால் தல ஆய்வு செய்த பின்னர் வரி விதிப்பு உள்ள கட்டிடங்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் எவ்வித வருவாய் இழப்போ, முறைகேடோ ஏதும் நடக்கவில்லை என்ற விவரம் நேரடி தல ஆய்வில் கண்டறியப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வெங்கம்பூர் பேரூராட்சியில், தனி நபர் இல்லங்களில் கட்டப்படும் கழிப்பறைகளுக்கு மத்திய அரசு மான்யம் ரூ.4,000/–, மாநில அரசு மான்யம் ரூ.2,000/–, பேரூராட்சி பங்குத் தொகை ரூ.2,000/– ஆக மொத்தம் ரூ.8,000/– மட்டும் ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படுவதாகவும், வெங்கம்பூர் பேரூராட்சியில் தனி நபருக்கு வழங்கப்படும் விண்ணப்பத்திற்கு தொகை ஏதும் பெறப்படுவதில்லையெனவும், 2015–16ம் ஆண்டுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள வீடுகளில் தனி நபர் கழிப்பிடம் கட்டப்பட்ட 83 நபர்களுக்கு தனி நபர் கணக்கில் பேரூராட்சி மூலம் ரூ.6,64,000/– மற்றும், கட்டப்படாமல் இருந்த ஏழை பயனாளிகளின் 61 கழிப்பிடம் கட்ட போதிய நிதி வசதியின்மை காரணமாக தாங்களே தங்கள் பேரூராட்சி ஒப்பந்தக்காரர் மூலம் தனி நபர் கழிப்பிடம் கட்டிக் கொடுக்குமாறும், மேற்படி தொகையினை ஒப்பந்தக்காரருக்கே வழங்குமாறும் விண்ணப்பம் கொடுத்ததின் பேரில், சூர்யா அண்டு கோ நிறுவனத்தின் மூலம் கட்டப்பட்ட தனி நபர் கழிப்பிடங்கள் 61–க்கு உரிய தொகை ரூ. 4,88,000/– சூர்யா அன் கோ நிறுவனத்தின் பெயருக்கு பேரூராட்சி மூலம் காசோலையாக வழங்கப்பட்டதாகவும், ஆகமொத்தம் 144 நபர்களுக்கு மட்டும் பேரூராட்சி மூலம் தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் நேரடி ஆய்வில் தெரியவந்ததாக தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. வடக்குப் புதுப்பாளையம் வார்டு எண்.11–ல், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நீர்த்தேக்கத் தொட்டி ரூ.4.30 லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்காக நிர்வாக அனுமதி தீர்மான எண்.116/2013, நாள். 10.09.2013ன்படி பெறப்பட்டுள்ளதாகவும், இப்பணி துவங்குவதற்காக பணி உத்திரவு 07.02.2014ல் வழங்கப்பட்டதாகவும், இப்பணிக்கான அளவு புத்தக எண்.11/2013–14,ல் பணிகள் மேற்கொண்ட அளவீடுகள் விவரம் பதியப்பட்டுள்ளதாகவும், மேலும் வார்டு எண். 2,4,9,10,11,12 மற்றும் 14 ஆகிய பகுதிகளில் கூடுதல் பைப் லைன் விஸ்தரிப்பு செய்யும் பணிக்காக 2013–14ம் நிதியாண்டில் பொது நிதியில் மதிப்பீடு ரூ.4.50 லட்சத்தில் இப்பணிக்கான நிர்வாக அனுமதி 31.01.2014 பெறப்பட்டு, 18.02.2014ல் பணி உத்திரவு வழங்கப்பட்டதாகவும், இப்பணிக்கான அளவுகள் அளவுப் புத்தக எண் 14(A) /2013–14ல் பணிகள் மேற்கொண்ட அளவீடுகள் விவரம் பதியப்பட்டுள்ளதாகவும், எனவே முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளவாறு, ஒரே பணியினை இரண்டு முறை செய்ததாக கூறி இருமுறை முறைகேடாக தொகை வழங்கப்படவில்லை என தெரிவதாகவும், மேலும் இது சம்பந்தமாக முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்படி, சூர்யா அன் கோ நிறுவனம் 2011 முதல் 2016 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் விவரப்பட்டியல் கோரியதில், ஒப்பந்தப்புள்ளி வருகைப் பதிவேட்டை ஆதாரமாகக் கொண்டு தகவல் வழங்கப்பட்டதில், வடக்குப்புதுப்பாளையம் 11–வது வார்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருமுறை கட்டியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, அலுவலக இளநிலை உதவியாளர் பதிவேட்டில் எடுத்து எழுதும்போது தவறுதலாகவும்,

கவனக்குறைவாகவும், வேறு பணியின் பெயருக்கு பதில் மேற்குறிப்பிட்ட ஒரே பணியினை இருமுறை எடுத்து எழுதியுள்ளதாகவும், ஆனால் மீண்டும் கோப்புகள் சரிபார்த்தபோது இது தவறு என தெரியவந்ததாகவும், எனவே முறையீட்டு மனுதாரர் கூறியது போல் ஒரே பணியினை இரண்டு முறை செய்ததாக கூறி முறைகேடாக பணம் வழங்கப்படவில்லை என்ற விவரம் நேரடி ஆய்வில் தெரியவந்தததாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. வெங்கம்பூர் பேரூராட்சி தலைவராக திரு.டி.சிவகுமார் என்பவர் 25.10.2011ல் பதவியேற்றுள்ளதாகவும், இவர் சூர்யா அண்டு கோ நிறுவனத்தில் இருந்து 10.09.2011ல் விலக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது பங்குதாரர்களாக திருமதி.எல்.தனலட்சுமி, க/பெ.திரு.லோகநாதன், மற்றும் திரு.பி.கார்த்திகேயன், த/பெ திரு.பழனிச்சாமி ஆகியோர் மட்டும் பங்குதாரர்களாக உள்ளதற்கான பங்குதாரர் உரிமை ஆவணம் 10.09.2011ல் எழுதப்பட்டுள்ளதாகவும், மேற்படி நிறுவனம் க.எண்.17, ஆபீஸ் கட்டிட வீதி, வடக்குப் புதுப்பாளையம் என்ற முகவரியில் உள்ளதாக ஆவணங்களின்படியும் நேரடி தல ஆய்விலும் தெரியவருவதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

6. வெங்கம்பூர் பேரூராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள பழைய வீடுகளை இடித்து விட்டு புதிய ஓட்டுவில்லை, தார்சு வீடுகள் கட்டும்போது ஒவ்வொரு வருடமும் பேரூராட்சியில் பதிவு பெற்ற கட்டிட வரைவாளரால் வரைபடங்கள் மற்றும் அதற்கான மதிப்பீடுகளுடன் பேரூராட்சியால் பெறப்பட்டு, பேரூராட்சி செயல் அலுவலரால் அனுமதி வழங்குவதற்கு முன் கட்டிட இடத்தை ஆய்வு செய்த பின்னர், விண்ணப்பதாரர் செலுத்தப்பட வேண்டிய தொகை வசூலிக்கப்பட்டு, பேரூராட்சி கணக்கில் வரவாக்கப்படுவதாகவும், பேரூராட்சியில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களில், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டப்படி வரி விதிப்பு , கட்டிட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அளவுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டு சொத்து வரி தொகை வசூல் செய்யப்பட்டு பேரூராட்சிக் கணக்கில் செலுத்தப்படுவதாகவும், இச்செயல்பாடுகள் அனைத்தும் பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மேலும் இவை அனைத்தும் தணிக்கைத் துறையினரால் ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டு வருவதாகவும், மேலும் இது தொடர்பான பதிவேடுகள் தல ஆய்வு செய்ததில் முறைகேடுகள் செய்தமைக்கான ஆதாரங்கள் ஏதும் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. வெங்கம்பூர் பேரூராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள வணிக வளாகங்கள், தொழிற்கூடங்கள், அரிசி ஆலைகள், திருமண மண்டபம் போன்ற வணிக பயன்பாட்டு கட்டிடப் பரப்பு, சொத்து வரி,தொழில் வரி விதிப்புகள் மீது சிறப்பு தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில், 5 அரிசி ஆலைகள், 2 திருமண மண்டபங்கள் ஆகியவைகளுக்கு விண்ணப்பதாரர்கள் உரிய ஆவணங்கள் மற்றும் வரைபடங்களுடன் விண்ணப்பித்ததின்பேரில் பேரூராட்சி செயல் அலுவலரால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டிட விதிமுறைகளின்படியும் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், வரி விதிப்பு செய்யப்பட்ட கேட்பு தொகையின்படி சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர்களால் பேரூராட்சியில் நேரடியாக சொத்துவரி தொகை செலுத்தியதின் பேரில் உரிய இரசீதுகளும் வழங்கப்பட்டு வருவதாகவும், இது தொடர்பாக தல ஆய்வு மேற்கொண்டதில் பேரூராட்சி நிர்வாகத்தால் வருவாய் இழப்புகள் ஏதும் ஏற்பட்டதாக கண்டறியப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே முறையீட்டு மனுதாரர் திரு.எம்,சேதுராமன், த/பெ திரு மூர்ததி நாயுடு(லேட்) 59/1, முனியப்பன் கோவில் வீதி, வருந்தியாபளையம் புதுார், ஈராடு மாவட்டம் என்பவரால் அளிக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை எனவும், மேலும் முறையீட்டு மனுதாரர் வெங்கம்பூர் பேரூராட்சி பகுதியினை சார்ந்தவர் இல்லையெனவும், தனியார் சாலைப்புதுார் என்ற பகுதியில் வசித்து வருவதாகவும், விசாரணையில் முறையீட்டு மனுதாரர் தனிப்பட்ட விரோத போக்கு, காழ்ப்புணர்ச்சி காரணமாகவே புகார்கள் அளிக்கப்பட்டு வருவது தல ஆய்வில் காண முடிவதாகவும், மேலும் மேற்படி முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலத்தில் அளிக்கப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில் புலனாய்வு விசாரணை மேற்கொள்வது என்பது முற்றிலும் அடிப்படையற்றது என்ற விவரத்தினை ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது தல ஆய்வு மற்றும் விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

03.10.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 10.09.2018 நாளிட்ட தல ஆய்வு அறிக்கையின் நகல் முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மேற்படி அறிக்கையின் மீதான முறையீட்டு மனுதாரரின் விளக்கம்/ஆட்சேபணை இருப்பின் அதனை ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 11.10.2018 நாளிட்ட கடிதம் மூலம் மேற்படி ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கையின் விவரங்களை மறுத்து, தனது கோரிக்கையினை ஒரு சுதந்திரமான புலனாய்வு அமைப்பு மூலம் விசாரணை மற்றும் ஆய்வு செய்யக் கோரி இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 24.10.2018 நாளிட்ட அறிவிப்பாணையில் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 10.09.2018 நாளிட்ட விசாரணை அறிக்கையின் மீது முறையீட்டு மனுதாரரால் 11.10.2018ல் மறுப்பு தெரிவிக்கப்பட்டமைக்கான ஆதார ஆவணங்கள் ஏதுமிருப்பின் அதன் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்தில் ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 31.10.2018 நாளிட்ட கடிதத்தில் தான் ஏற்கனவே 11.10.2018ல் தாக்கல் செய்த அதே கோரிக்கையினை மீண்டும் வலியுறுத்துவதாக தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான பேரூாட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரரின் வாக்குமூலங்கள் மற்றும் கூடுதல் வாதுரைகள், மேற்படி வாதுரைகளின் மீதான ஈரோடு மண்டல பேரூராடசிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு அறிக்கை, மேற்படி தல ஆய்வறிக்கையின் மீதான முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் வாதுரை, மேற்படி முறையீட்டு மனுதாரின் வாதுரையின் மீதான ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விசாரணை அறிக்கை ஆகியன மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை ஈரோடு மாவட்டம், வெங்கம்பூர் பேரூராட்சியில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் கோரி பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே தனது முறையீட்டினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளதாக தனது வாக்குமூலத்திலும், தனது வாதுரையிலும் தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய சில தகவல்கள்

சம்பந்தப்பட்ட அலுவலரால் தனக்கு தரப்படவில்லை எனவும் தனது மனுவில் தெரிவித்துள்ளார். அவ்வாறு கோரிய தகவல்கள் பெறப்படாத நிலையில் 2005–ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமை சட்டப் பிரிவுகளின்படி உரிய மேல் முறையீட்டு அலுவலருக்கு விண்ணப்பித்து பெறுவதை தவிர்த்து பெறப்பட்ட பொதுவான தகவல்களின் அடிப்படையில் தனது முறையீட்டினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்தும், ஊழல் புகார்கள் குறித்து குறிப்பான ஆவண ஆதாரங்கள் எதனையும் அளிக்காமல் ஏற்கனவே முறைமன்ற நடுவ சட்டப் பிரிவுகளின்படி நிர்ணயிக்கப்பட்ட ஒரு உயர் அலுவலரால் ஆய்வு செய்து அறிக்கை அளிக்கப்பட்டிருந்தும், தனது ஆதாரமற்ற புகார்களுக்காக ஒரு தனிப்பட்ட சுதந்திரமான புலனாய்வு அமைப்பின் விசாரணைக்கு ஆணையிடவேண்டுமென தான் விரும்பும் வகையில் முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை வலியுறுத்துவது ஏற்புடையதல்ல. மனுதாரருக்கு பல சந்தர்ப்பங்கள் அளித்தும் தனது புகாருக்கு ஆதாரங்களை அளிக்கத் தவறியுள்ளார். எனவே புகார்களுக்கு ஆதாரங்கள் ஏதும் சமர்ப்பிக்காத நிலையில் இப்பொருள் தொடர்பாக ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் தல ஆய்வு மற்றும் விசாரணை அறிக்கையினை ஏற்றும் இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் கைவிடப்படுகிறதென தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. தவறான தகவல்கள் அளித்த சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளர் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுத்து விவரம் தெரிவிக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்

1.திரு.எம்.சேதுராமன்,
த/பெ. மூர்த்தி நாயுடு (லேட்),
59/1, முனியப்பன் கோவில் வீதி,
வருந்தியாபாளையம் புதூர்,
சாலைப்புதூர் அஞ்சல்,
ஈரோடு மாவட்டம் – 638 151.

2.செயல் அலுவலர்,
வெங்கம்பூர் பேரூராட்சி,
ஈரோடு மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ஈரோடு மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு.